நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்).
நாள். 20.10.2023.

இயல்புக்கூட்டம்

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் அக்டோபர்–2023 ஆம் மாத இயல்புக்கூட்டம் வருகிற 31.10.2023 ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்.
ஆத்தூர் நகர்மன்றம்.

தீர்மானப்பொருள்

1. 29.09.2023ல் ஒத்திவைக்கப்பட்ட பொருள் திருத்தி கீழ் கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளவாறு

இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணாகலையரங்கத்தில் திருமணம், திருமண வரவேற்பு, காதணி விழா, மஞ்சள் நீராட்டு விழா, வளைகாப்பு நிகழ்ச்சி, ஜவுளி விற்பனை, வீட்டு உபயோக பொருட் காட்சி, பள்ளி ஆண்டுவிழா மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு கீழ்கண்டவாறு 01.11.2023 முதல் வாடகை மற்றும் முன் வைப்புத்தொகை செலுத்த அதற்கான நிபந்தனைகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிகழ்ச்சிகள் விபரம் | முன்வைப்புத் தொகை ரூ. | ஒருநாள் வாடகை ரூ. | காலம் |
|---|---|---|---|---|
| 1 | திருமணம் (கலையரங்கம் நிகழ்ச்சிக்கு எடுத்து கொண்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்கு மட்டும்) | 50000 | 30000 | 24 மணி நேரம் |
| 2 | கூடுதலாக 12 மணி நேரம் தேவை எனில் அதற்கான முன் அனுமதி. | 15000 | 10000 | 12 மணி நேரம் |
| 3 | வரவேற்பு, காதணிவிழா, மற்றும் மஞ்சள் நீராட்டு விழா,வளைகாப்பு விழா,மகளிர் குழு கூட்டம், நடன அரங்கேற்ற நிகழ்ச்சி (ஒருநாள் நிகழ்ச்சி) | 25000 | 15000 | 12 மணி நேரம் |
| 4 | (Sale) கண்காட்சி ஜவுளி விற்பனைடிக்கட் மூலம் நடத்தப்படும் பொருட்காட்சி ஆ | 75000 | 12000 | 24 மணி நேரம் |
| 5 | இலவச மருத்துவ முகாம் இலவச விழிப்புணர்வு நிகழ்ச்சி. தொண்டு நிறுவன சமுதாய கூட்டம். அரசு /அரசு சார்ந்த விழாக்கள், காந்தி ஜெயந்தி விழா | 15000 | 7000 | 12 மணி நேரம் |
| 6 | பணி நிறைவு பாராட்டு விழா, பயிற்சி நடத்துதல், பால் சொசைட்டி கூட்டம், , திருவிளக்கு பூஜை அரசியல் கட்சி சார்ந்த விழாக்கள், பள்ளி ஆண்டு விழாக்கள் | 20000 | 12000 | 12 மணி நேரம் |

நிபந்தனை குறிப்பு

1.மண்டபம் முன்வைப்பு தொகையினை வங்கி வரைவோலையாக ஆணையாளர் ஆத்தூர் நகராட்சி என்ற பெயரில் நிகழ்ச்சிக்கு 15 நாட்கள் முன்னதாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2.Initial payment சுத்த கட்டணம் ரூ.3000/– வசூலிக்கப்படும் முன்னரே செலுத்த வேண்டும். மின்கட்டணம் ஒரு யூனிட்டுக்கு ரூ.25/– வீதம் வசூலிக்கப்படும்.

3.சேவை வரி 18% (மொத்த தொகையில்) சதவீதம் வசூலிக்கப்படும். மேலும் அரசு அவ்வப்போது அறிவிப்பிற்கு ஏற்றவாறு சேவை வரி வசூலிக்கப்படும். இவைகளை தனியாக செலுத்தப்பட வேண்டும்.

4.திருமண மண்டபம் நிகழ்ச்சிக்கு ஒதுக்கீடு செய்ய முன் வைப்புத்தொகை செலுத்திய பின்னர் எதிர்பாராத விதமாக மனுதாரால் நிகழ்ச்சி முன் பதிவினை ரத்து செய்ய தாமாகவே முன்வந்து 15 தினங்களுக்குள் இருக்க கோரினால் செலுத்திய தொகையில் 50 சதவீதம் மட்டுமே திரும்ப வழங்கப்படும். 7 தினங்களுக்கு முன் கோரினால் 25 சதவீதம் மட்டுமே திரும்ப வழங்கப்படும். 7 தினங்களுக்கு குறைவான நாட்களில் கோரினால் எக்காரணத்தை கொண்டும் செலுத்திய தொகையினை திரும்ப வழங்க இயலாது.

5.திருமண மண்டபம் முன்பதிவு செய்வதற்கு குறைந்தது 3 முதல் 30 நாட்கள் கால இடைவெளியில் முன்பதிவு செய்யப்படும்.

6.முன்பதிவு செய்யப்படும் பயனாளி ஆதார் அடையாள அட்டை, புகைப்படம், குடும்ப அட்டை, இருப்பிடச்சான்று இவை அனைத்தும் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே திருமண மண்டபம் முன்பதிவு செய்யப்படும்.

7.சுபகாரியங்கள் நிகழ்ச்சி ஒருநாள் என்பது முதல் நாள் பிற்பகல் 2.00 மணி முதல் மறுநாள் பிற்பகல் 2.00 மணி வரையாகும். இது ஒரு நாள் நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்படும் காலமாகும்.

8.கண்காட்சி, ஜவுளி வியாபாரம் விற்பனை ஆகியவைகளுக்கு அதிகபட்சம் 15 தினங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும். கூடுதலாக விற்பனை செய்ய தேவைப்பட்டால் மீண்டும் அனுமதி பெறப் பட வேண்டும்.

9.கலையரங்கத்தை பயன்படுத்தும்போது கலையரங்கத்தில் உள்ள பொருட்களுக்கும், கட்டிடத்திற்கும் மற்றும் மின்சார சாதனங்களுக்கும் எவ்வித சேதாரமும் விளைவிக்கக் கூடாது. மேலும் உட்புற மற்றும் வெளிப்புற சுவர்களில் விளம்பரங்கள் மற்றும் சித்திரங்கள் எழுதவோ, ஒட்டவோ கூடாது.

10.கலையரங்கத்தில் உள்ள பொருட்களுக்கும் மற்றும் கட்டிடங்களுக்கும் ஏதேனும் சேதாரம் ஏற்பட்டால் அதற்குண்டான செலவுத் தொகை முழுவதும் மனுதாரரால் செலுத்தப்பட்ட முன்பணத் தொகையில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

11.அனுமதிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் சமூக கேடு மற்றும் தடை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் இருக்க கூடாது.அவ்வாறு ஏதேனும் புகார் மற்றும் ஆய்வு செய்த போது கண்டறியப்பட்டால் பொது நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி எவ்வித முன்னறிவிப்பு இன்றி கொடுக்கப்பட்ட அனுமதியை ரத்து செய்ய ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு.செலுத்திய தொகை திரும் வழங்கப்பட மாட்டாது.

12.கலையரங்கம் பயன்படுத்தும்போது மனுதாரரே தங்களது உடைமைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதில் ஏற்படும் இழப்புகளுக்கு நகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது.

13.கலையரங்கம் ஒதுக்கீடு செய்த நாட்களில் பொதுமக்களுக்கும், நகராட்சி அலுவலகத்திற்கும் காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை இடையூறு ஏற்படா வண்ணம் ஒலி பெருக்கி சாதனம் அமைக்க வேண்டும். மேலும் ஒலிபெருக்கி சாதனம் உபயோகிப்பதற்கான உரிமம் காவல் துறையினரிடமிருந்து மனுதாரரே தனது சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

14.மனுதாரால் எந்த நிகழ்ச்சிக்கு திருமணமண்டபம் முன் பணம் செலுத்தி பதிவு செய்யப்பட்டதோ அந்த நிகழ்ச்சி மட்டுமே நடத்த அனுமதிக்கப்படும். வேறு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்பட மாட்டாது.

15.திருமண மண்டபம் முன்பதிவு செய்யும்முன் திருமண மண்டபத்தில் உள்ள வசதிகளை நன்கு அறிந்த பின்பே முன்பதிவு செய்யப்பட வேண்டும்.

16.நிகழ்ச்சி நடைபெறும் காலங்களில் திருமண மண்டபத்தில் எதிர்பாராத விதமாக மின்தடை மற்றும் குடிநீர் சம்மந்தமான நிகழ்வுகள் தடைபட்டால் மனுதாரரின் தங்களது சொந்த செலவில் சரி செய்து கொள்ள வேண்டும்.

17.நகராட்சி நிர்வாகம் மின்சாரம் மற்றும் இதர வசதிகளுக்கு பொறுப்பு ஏற்காது.முன்பகுதியில் பந்தல் மற்றும் வாழை மரங்கள் தங்கள் சொந்த செலவில் நிகழ்ச்சி முடிந்த பின்னர் அன்றே எடுத்து செல்ல வேண்டும்.

18.திருமண மண்டபத்தில் மேடை அலங்காரம் மற்றும் மின்விளக்கு அலங்காரங்கள் தங்களது சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும்.

19.திருமணம் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கு பாதுகாவலர்கள் தனியாக வழங்க இயலாது. தாங்களே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இதற்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்காது.

20. நிகழ்ச்சி நடத்துபவர் திருமண மண்டபத்தில் எவ்விதமான வசதிகள் உள்ளது என்று நன்கு கேட்டறிந்து கொள்ளவேண்டும். ஏற்கனவே என்ன வசதிகள் உள்ளதோ அதை மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும் வேறு எவ்விதமான கூடுதலாக நிகழ்ச்சிக்கு எதுவும் நகராட்சியால் தனியாக செய்து தர இயலாது .

21. நிகழ்ச்சி நடத்துபவரால் என்ன தேதிக்கு நிகழ்ச்சி நடத்த பதிவு செய்யப்பட்டதோ அன்றைய நாள் மட்டுமே திருமண மண்டபத்தினை பயன் படுத்த அனுமதிக்கப்படுவார் மற்றும் நிகழ்ச்சி முடிந்த பின்னர் என்ன தேதிவரை பதிவு செய்யப்பட்டதோ அன்றே மண்டபத்தினை காலி செய்து தரப்பட வேண்டும். கூடுதலாக மண்டபத்தினை பயன்படுத்த காலம் எடுத்துகொள்ள அனுமதி கிடையாது.

22. எந்த விதத்திலும் அண்ணாகலையரங்கத்தில் இலவசமாக நிகழ்ச்சி நடத்துவதற்கு அனுமதிக்கப் பட இயலாது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. அரசாணை (நிலை) எண்.145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ம.நா.2) துறை நாள்.14.10.2022–ல் மாநில நகர்ப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியின் கீழ் 8 மாநகராட்சி மற்றும் 76 நகராட்சிகளில் உள்ள சுமார் 3,00,796 மின் சிக்கன மற்ற சாதாரண தெரு விளக்குகளை மாற்றி, மின் சிக்கன தெருவிளக்குகளான LED விளக்குகளை பொருத்த, சுமார் ரூ.342.85 கோடிகள் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் வாயிலாக கடன் பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் ஆத்தூர் நகராட்சியில் உள்ள சுமார் 2112 மின் சிக்கன மற்ற தெரு விளக்குகளை அப்புறப்படுத்தி விட்டு, மின் சிக்கன LED தெரு விளக்குகளாக மாற்றியமைப்பதன் மூலம் சுமார் 11% மின் கட்டணம் சேமிக்கப்படும். எனவே, இப்பணிக்கு ஆத்தூர் நகராட்சிக்கு மதிப்பீடு தொகை ரூ.234.08 இலட்சம் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது. பெறப்படும் நிதிக்கு வருடத்திற்கு 5% வீதம் வட்டியும், அசலையும் 6 வருட காலங்களில் திரும்ப செலுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கைகள் காரணமாக 11% வரை மின் கட்டணம் சேமிக்கலாம். அவ்வாறு சேமிக்கப்படும் நிதியினை பயன்படுத்தி கடனை வட்டியுடன் திரும்ப செலுத்தவும், இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) 2112 தெரு விளக்குகளை புதிய LED தெரு விளக்குகளாக மாற்றம் செய்ய தேவைப்படும் நிதி ரூ.234.08 இலட்சத்தினை TUFIDCO நிறுவனத்திடமிருந்து வருடத்திற்கு 5% வட்டி விகிதத்தில் பெறவும், அதை 6 ஆண்டுகளில் திரும்ப செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை எடுத்துள்ளதையும். மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்4040/2022/இ1)

3. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் 2023–2024 ஆம் ஆண்டிற்கான நிலுவை வரிகள் மற்றும் நடப்பு வரிகளான சொத்துவரி, காலிமனைவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் அனைத்தையும் 31.10.2023க்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்துவதற்கும், சொத்துவரி செலுத்துபவர்களுக்கு 5%(சதவீதம்) ஊக்கத்தொகை வழங்கப்படும் என்ற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செய்தி வெளியீட்டின்படி இரண்டாம் தவணை சொத்துவரி செலுத்த வேண்டி தனியார் துறை மூலம் ஆட்டோ விளம்பரம் செய்யவும், துண்டு பிரசுரங்கள் அச்சிடவும் மற்றும் செய்தித் தாள்களில் வெளியிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு, பணி மேற்கொள்ளவும் முன் அனுமதிக்கு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்ற அனுமதியினை எதிர்நோக்கி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத் தொகையை நகராட்சி பொது நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து செலவழிக்க மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்1263/2022/அ1)

4. இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தனகிரி பள்ளியின் கட்டிடத்தின் மேல் தளத்தில் பழுதுடைந்துள்ள நிலையில் உள்ள Weathering course மாற்றி அமைக்கவும், தேவையான மின் வசதி மற்றும் மின் விளக்குகள் பொருத்தவும், டேபிள், சேர் வாங்கவும், பி.வி.சி குழாய்கள் மாற்றி அமைத்தல், டைல்ஸ் தரைதளம் அமைக்கவும், கட்டிடத்திற்கு புதியதாக வர்ணம் பூசி புதுப்பிக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர் மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை கல்வி நிதி அல்லது பெறப்படும் அரசின் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை எடுத்துள்ளதையும். மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்2879/2022/இ1)

5. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்7ல் LRC திருமண மண்டபம் பின்புறம் உள்ள முதல் குறுக்கு தெரு, நான்காவது குறுக்கு தெருவில் புதியதாக குடிநீர் பகிர்மான அமைத்து அப்பகுதி பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத்தொகை ரூ.1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம், மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதியை பெற்று மேல் நடவடிக்கை எடுத்துள்ளதையும் மன்றம் ஏற்கலாம்

6. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023–2024ம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் அரசாணை, (4D) எண்39, நாள்.14.09.2023ல் ரூ.76.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு புதியதாக பழக்கடைகள் அமைத்தல் பணி மற்றும் வார்டு எண் 11ல் புதியதாக வெற்றிலை மார்க்கெட் அமைத்தல் பணிக்கு 119.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கியும் கீழ்காணும் விபரப்படி வரபெற்ற அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ, எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ.இலட்சத்தில் ) | | |
|---|---|---|---|---|
| | | மொத்தம் | KNMT Share | ULB Share |
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு டி, பிளாக் எண் 18, சர்வே எண் 3ல் புதியதாக பழக்கடைகள் அமைத்தல் பணி | 119.00 | 60.00 | 59.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்11ல் புதியதாக வெற்றிலை மார்க்கெட் கட்டுதல் பணி | 76.00 | 38.00 | 38.00 |

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.2658/2022/இ1)

7. ஆத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு –ஏ, பிளாக்–24, நகரளவை எண்.16/6,7,9 இல் 0.55 ஏக்கர் பரப்பளவு இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய உபயோக பகுதியிலிருந்து வணிக உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய திரு. K.C.ருத்திரகுமார் என்பவரின் 10.10.2022ஆம் தேதிய விண்ணப்பம் வரப்பெற்றதின் பேரில் மாவட்ட மக்கள் செய்தி அலுவலர் அவர்களுக்கு கடந்த 30.06.2023 அன்று தினசரி நாளிதழில் பிரசுரம் செய்ய கடிதம் அனுப்பப்பட்டது.அதன்படி கடந்த 01.07.2023 அன்று AFTERNOON கோயமுத்தூர் என்ற ஆங்கில நாளிதழிலும், 01.07.2023 தமிழ் சுடர் என்ற தமிழ் நாளிதழிலும் பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி செய்தி வெளியான நாளிலிருந்து 30 தினங்கள் வரை ஆட்சேபனை ஏதும் பொது மக்களிடம் இருந்து எவ்வித ஆட்சேபனையும்/ ஆலோசனைகளும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே மேற்படி நகரளவு எண்ணில் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து வணிக உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்வது தொடர்பாக உள்ளூர் திட்டக்குழுமத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மனுதாரரின் 0.55 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து வணிக உபயோகமாக மாற்றம் செய்ய தினசரி நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது. செய்தி வெளியிடப்பட்ட நாள் முதல் 30 நாட்கள் வரை சர்வே வார்டு –ஏ பிளாக் –24,நகரளவை எண் .16/6,7,9 - இல் 0.55 ஏக்கர் பரப்பளவு பரப்பளவிற்கு பொது மக்களிடம் இருந்து எவ்வித ஆட்சேபனை/ஆலோசனை ஏதும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே மேற்படி நகரளவு எண்ணில் அமைந்துள்ள இடத்தினைஅங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்தில் இருந்து வணிக உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்ய உள்ளூர் திட்டக் குழுமம் ஒப்புதல் அளித்து அனுமதிக்கலாம் (ந.க.எண்.3964/2022/எப்1)

8. ஆத்தூர் நகராட்சி குடிநீர் பணிகளை கவனிக்கவும் ஒருங்கிணைப்பு செய்யவும் மூன்று பணியாளர்கள் (Out sourcing) முறையில் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செந்தார விலை விகிதத்தில் மற்றும் 6 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண் 793, நாள் 29.09.2023ல் ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 13.10.2023ல் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S.செந்தூர்கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரர், ஆத்தூர் | மதிப்பீட்டு விலைக்கு |
| 2 | திரு.ஆர். செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 5.53 % அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S.செந்தூர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரர் ஆத்தூர் என்பவரின் மதிப்பீட்டு விலைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/S.செந்தூர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.(ந.க.எண்.3011/2023/இ1)

9. ஆத்தூர் நகரம் மற்றும் நரசிங்கபுரம் நகரம் எல்லையில் உள்ள அரசுக்குச் சொந்தமான பூங்கா ப்குதியில் உடற்பயிற்சிக்கூடம் மற்றும் உள் விளையாட்டரங்கம் அமைத்தல் பணிக்கு மாவட்ட திட்ட மிடும் அலுவலர் சேலம் அவர்களின் கடிதம். ந.க.எண்12/2023/மாதிபி, நாள்22.09.2023ல் சாத்திய கூறு அறிக்கை மற்றும் மதிப்பீடு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. மேற்படி இடமானது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பொது திறவிடத்திற்காக ( Common Public Purpose) ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இந்த இடத்தில் உடற்பயிற்சிக்கூடம் மற்றும் உள் விளையாட்டரங்கம் அமைக்க தனியார் கலந்தாலோசகர் (Private Consultant) மூலம் திட்ட பிரேரானைகள் தயார் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை வருவாய்நிதி/ பெறப்படும் அரசின் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்,

2.மேற்படி பணியின்அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்துள்ளதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2917/2023/இ1 )

10. ஆத்தூர் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் அமைக்க உள்ள இடத்தில் பூமிக்கு அடியிலுள்ள பழைய கட்டிடத்தின் சிமெண்ட் கான்கிரீட் அஸ்திவாரம் மற்றும் அள்ளைசுவர் அப்புறப் படுத்துதல் பணிக்கு ரூ.7.33 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண் 797, நாள் 29.09.2023ல் அனுமதி வழங்கியதன் பேரில் இப்பணிக்கு 05.10.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப் பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S .V,S,அசோசியட்ஸ் ஒப்பந்ததாரர் ஆத்தூர். | 22.64 % அதிகம் |
| 2 | M/S ஸ்ரீ,தேவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் ஆத்தூர். | 21.31 % அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S ஸ்ரீ,தேவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் ஆத்தூர். என்பவரின் 21.31 % மதிப்பீட்டை விட கூடுதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை குறைத்து தர கோரி மேற்படி ஒப்பந்ததாரரிடம் கோரப்பட்டதில் M/S ஸ்ரீ,தேவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் மதிப்பீட்டை விட 0.10% க்கு குறைந்த விலை விகிதத்தில் பணி செய்ய சம்மத கடிதத்தில் தெரிவித்துள்ளார் இதனை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.10 % குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு பணி செய்ய சம்மத கடிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/S ஸ்ரீ.தேவி கன்ஸ்ட்ரக்‌ஷன்ஸ் ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2.திட்டபணிகள் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக இந்த பணியை உடனடியாக செய்ய வேண்டி உள்ளதால் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2273/2023/இ1)

11 இந்நகராட்சிக்கு சொந்தமான ஜோதி நகர் பள்ளியின் கட்டிடத்தின் மேல் தளத்தில் பழுதுடைந்துள்ள நிலையில் உள்ள Weathering course மாற்றி அமைக்கவும், பழுதடைந்துள்ள இரும்பு கதவுகள், ஜன்னல்கள் , புதியதாக சாய்வு தளம் , சீலிங் பகுதியை சீரமைக்கவும் கைப்பிடி அமைக்கவும், எதிர் புறமுள்ள பழுதடைந்த கட்டிடத்தை சீலிங் மற்றும் இதர தேவையான வசதிகள் செய்யவும் கட்டிடத்திற்கு புதியதாக வர்ணம் பூசி புதுப்பிக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.8.10 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை கல்வி நிதி அல்லது பெறப்படும் அரசு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்3560/2023/இ1)

12. இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்TN,77B.5356ன்பேட்டரி பழுதடைந்து உள்ளதால் ஈப்பு வாகனத்தை தொடர்ந்து இயக்க முடியாமல் உள்ளது. இதனால் அலுவலகம் சம்மந்தமான குடிநீர் விநியோகம், பணிகள் குறித்த, திட்டப்பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் சேலம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் ஆகிய அலுவலகங்களில் நடைபெறும் ஆய்வு கூட்டங்களில் அலுவலர்கள் கலந்து கொள்வதில் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே நிர்வாக நலன் கருதி பழுதடைந்துள்ள பேட்டரியினை எடுத்து விட்டு புதியதாக பேட்டரி வாங்கி பொருத்த ஆகும், உத்தேச செலவினம், ரூ.9200/-க்கு விலைப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு பெறப்பட்டது. இதனை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது,

| வ.எண் | விலைப்புள்ளிகள் விவரம் | விலைவிபரம் |
|---|---|---|
| 1 | திரு.மித்ரா பேட்டரிஸ் கிச்சிபாளையம் ,மெயின்ரோடு சேலம். | ரூ. 9150அதிகம் |
| 2 | ஸ்ரீ.கண்ணன் பேட்டரி ஒர்க்ஸ் டிடி ரோடு , சேலம். | ரூ.9200 அதிகம் |
| 3 | திரு தாஜ் டிசைனர்ஸ்கடலூர் மெயின்ரோடு,ஆத்தூர். | ரூ.9000 குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் திரு தாஜ் டிசைனர்ஸ் கடலூர் மெயின்ரோடு ஆத்தூர், என்ற நிறுவனத்தாரின் குறைந்த விலையினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. குடிநீரின் அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்திற்கு பேட்டரி புதியதாக வாங்க விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் ஏற்கலாம். மற்றும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு தாஜ் டிசைனர்ஸ்கடலூர் மெயின்ரோடு,ஆத்தூர்.என்ற நிறுவனத்தின் குறைந்த விலையினை ஏற்று குடிநீரின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3206/2023/இ1)

13. இந்நகராட்சிக்கு சொந்தமான வடக்குகாடு பள்ளியின் கட்டிடத்தின் மேல் தளத்தில் பழுதுடைந்துள்ள நிலையில் உள்ள Weathering course மாற்றி அமைக்கவும், பள்ளியின் நுழைவு வாயில் படி 7 கட்டுகள் மாற்றுதல் , சாய்வு தளம் அமைத்தல், சீரான முறையில் மழைநீர் வெளியேற வசதிஅமைத்தல், பழுதடைந்த தேவையான மின் வசதி மற்றும் பள்ளி முன் பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் கட்டிடத்திற்கு புதியதாக வர்ணம் பூசி புதுப்பிக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை கல்வி நிதி அல்லது பெறப்படும் அரசின் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

14. இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி எண் TN.77.P..2585 பழுதடைந்து உள்ளதால் மேற்படி வாகனத்தை தொடர்ந்து இயக்க முடியாமல் உள்ளது. இதனால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே குடிநீரின் அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு விலைப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு பெறப்பட்டது. இதனை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் விவரம் | விலைவிபரம் |
|---|---|---|
| 1 | திரு.சங்கரன் ஆட்டோ கேரேஜ் புதுப்பேட்டை,ஆத்தூர். | ரூ. 20,656 அதிகம் |
| 2 | திரு. ராகவேந்தரா மோட்டார் விழுப்புரம், | ரூ.20,156 அதிகம் |
| 3 | ஸ்ரீ.மோட்டார்ஸ் நரசிங்கபுரம்,ஆத்தூர். | ரூ.19,696 குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் ஸ்ரீ.மோட்டார்ஸ் நரசிங்கபுரம், ஆத்தூர், என்ற நிறுவனத்தின் குறைந்த விலையினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.குடிநீரின் அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் ஏற்கலாம். மற்றும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஸ்ரீ.மோட்டார்ஸ், நரசிங்கபுரம், ஆத்தூர், என்ற நிறுவனத்தின் குறைந்த விலையினை ஏற்று குடிநீரின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3452/2023/இ1

15. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட முல்லைவாடி கிராம பழைய புல எண்கள் 380,388, 389,418,419 வார்டு–A, பிளாக்–23, புதிய நகரளவை எண்கள் 31/2,137,150,157,161/2–இல் வண்டிப்பாதை என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் தனிநபர்கள் ஆக்கிரமிப்பு செய்யப் பட்டுள்ளதை அகற்றக் கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் WP.NO. 17107/2018 –இல் செல்வராஜன் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் இவ்வலுவலகத்தின் சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் என்பவர் ஆஜராகி உள்ளார். அதற்கான வழக்கு கட்டணம் ரூ.12000/–ஐ வழங்கக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு ;

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2950/2023/எப்1)

16. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பழைய புல எண்கள் 505, வார்டு–D, பிளாக்–45, புதிய நகரளவை எண்கள்1/1 முதல் 10/1,11,12/1, முதல்15/1,16,17/1, முதல் 20/1 – இல் சர்க்கார் புறம்போக்கு I. F Road மார்ஜின் புல எண் 14/2,15/2–இல் உள்ள அரசு தரிசு என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி அறிவிப்பு வழங்கப்பட்டதையடுத்து 13 நபர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்கள் WP.NO. 5912 to 5917,6095 to 6097,9556,9557,24715 to 24716/2016 –இல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி 13 வழக்குகளிலும் இவ்வலுவலகத்தின் சார்பாக அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு. A. செல்வேந்திரன் என்பவர் ஆஜராகியுள்ளார். அதற்கான வழக்கு கட்டணம் ரூ1,56,000/– ஐ வழங்கக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ;

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.927/2023/எச்1) .

17. ஆத்தூர் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு எண் 1 முதல் 5 வரை உள்ள வார்டுகளில் பொது கழிப்பிடங்கள் மற்றும் சாக்கடைகள், கோவில் விழாக்களிலும்,தெருக்களிலும் தெளிப்பதற்கு பிளீச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்பு தூள் தேவைப்படுவதால் ஒப்பந்தப் புள்ளி கோரி வாங்கி கொள்வதற்கும் அதற்குரிய செலவினம் ரூ.3.50 இலட்சம் நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ;

பொது சுகாதார அவசரஅவசியம் கருதி தூய்மை பணிக்கு தேவையான பிளீச்சிங் பவுடர் 5000 கிலோ நீர்த்த சுண்ணாம்பு தூள்5000 கிலோ வாங்கி கொள்வதற்கும் அதற்கான செலவினம் வருவாய் நிதியிலிருந்து செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

18. ஆத்தூர் நகராட்சியில் குடிநீர் வியோகம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமும் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 5.50 MLD முதல் 5.80 MLD வரை மற்றும் உள்ளூர் நீர்ஆதாரத்தின் மூலம் 0.50 MLD முதல் 1.00 MLD வரை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆகையால் நகரில் பல நேரங்களில் பல இடங்களில் குடிநீர் விநியோகம் செய்யும் கால அளவு அதிகரிக்கிறது இதனை சீர் செய்ய வேண்டி ஆத்தூர் நகராட்சியின் குடிநீர் விநியோகம் தொடர்பான விரிவான சர்வே செய்து குடிநீர் விநியோக கால அளவை குறைத்து ஒரே சீரான குடிநீர் வியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதற்கிணங்க நகரின் குடிநீர் விநியோகம் தொடர்பான விரிவான சர்வே செய்து திட்ட அறிக்கை தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் (Private Consultant) மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை குடிநீர் நிதி/ பெறப்படும் அரசு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்,

2.குடிநீரின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்துள்ளதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2309/2023/இ1)

19. இந்நகராட்சிக்கு சொந்தமான 9 மேல்நிலை நீர்தேக்கதொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் செய்யும் போது குடிநீரில் தினசரி தேவையான அளவு குளோரின் அளவு கலந்து பொதுமக்களுக்கு அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால் குளோரினேசன்திரவ வாயு மூலம் குளோரின் செலுத்தி குடிநீர் சப்ளை செய்யஆகும், உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.311 9/2023/இ1)

20. ஆத்தூர் நகராட்சிக்குசொந்தமான வண்டி பேட்டை பகுதியில் புதியதாக கட்டப்பட்டு வரும் அறிவு சார் மையத்திற்கு புதியதாக நூல்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண் 3657.2023/பி1, நாள் 17.10.2023ல் கண்டுள்ள கடிதத்தில் ஆத்தூர் நகராட்சி நூலகத்திற்குரிய புத்தகங்களை நேரில் பாதுகாப்பான வாகனங்களில் வாடகை லாரி மூலமாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் அலுவலகத்திலிருந்து எடுத்து செல்ல தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஆத்தூரிலிருந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் அலுவலகத்திற்கு வாடகை லாரி மூலமாக சென்று ஆத்தூர் நகராட்சி அறிவு சார் மையத்திற்கு புதியதாக புத்தகங்களை எடுத்துவர உதவிப் பொறியாளரால் தனது சொந்த செலவில் லாரி வாடகை கொடுத்து புத்தகங்களை எடுத்து வரப் பட்டதற்கு ஆன செலவினத்தொகை ரூ.4800/–ஐ செலவிடப்பட்டுள்ளதால் மேற்காணும் தொகையினை உதவிப்பொறியாளருக்கு வழங்கவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை அரசின் திட்டநிதி /வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3581/2023/இ1)

21. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான கப்பு வாகனங்களை இயக்குவதற்கு பொறியியல் பிரிவில் பணிபுரிந்து வந்த இரு ஓட்டுனர்கள் வயது முதிர்வின் காரணமாக கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டனர் எனவே மேற்படி பணியிடமானது அரசால் நிரப்ப படாமல் காலியாகவே உள்ளதால் மேற்படி இரு பணியிடங்களை பூர்த்தி செய்யும் வரை (Out sourcing) ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செந்தாரா விலை விகிதத்தில் 6 மாதங்களுக்கு ஓட்டுனர் பணி செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக பணியில் அமர்த்திக் கொள்ள ஆகும் செலவினத்திற்கு ரூ.1.45 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3585/2023/இ1)

22. இந்நகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி.நகர் தெற்குகாடு பள்ளி ஆணையாளர் அவர்களால் ஆய்வு மேற்கொண்ட போது, மேற்படி பள்ளியில் உள்ள குறைபாடுகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள், செய்து தருமாறு நேரில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்கண்ட பள்ளி இடம் நேராய்வு செய்யப்பட்டதில், பள்ளியின் இடது புறமுள்ள கட்டிடத்தின் மேல் தளத்தில் பழுதுடைந்துள்ள நிலையில் உள்ள Weathering course மாற்றி அமைக்கவும், ஜன்னல்களில் ஏற்பட்டுள்ள விரிசல்களை சரிசெய்யவும், தேவையான மின் வசதி மற்றும் மின் விளக்குகள் பொருத்தவும், டேபிள், சேர் வாங்கவும், புதியதாக LED TV வாங்கவும், கட்டிடத்திற்கு புதியதாக வர்ணம் பூசி புதுப்பிக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண் 791, நாள் 29.09.2023ல் ரூ.4.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 13.10.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.செல்லக்கண்ணு,ஒப்பந்ததாரர் ,ஆத்தூர். | 0.27 % குறைவு |
| 2 | திருமதி .டி.பழனியம்மாள்,ஒப்பந்ததாரர் ,ஆத்தூர். | 0.54 % அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர், ஆத்தூர். என்பவரின் 0.27 % மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட27% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர், ஆத்தூர். என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2876/2023/இ1)

23. இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தனகிரி பள்ளியின் கட்டிடத்தின் மேல் தளத்தில் பழுதுடைந்துள்ள நிலையில் உள்ள Weathering course மாற்றி அமைக்கவும், தேவையான மின் வசதி மற்றும் மின் விளக்குகள் பொருத்தவும், டேபிள், சேர் வாங்கவும், பி.வி.சி குழாய்கள் மாற்றி அமைத்தல், டைல்ஸ் தரைதளம் அமைக்கவும், கட்டிடத்திற்கு புதியதாக வர்ணம் பூசி புதுப்பிக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர் மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு 13.10.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.செல்லக்கண்ணு,ஒப்பந்ததாரர் ,ஆத்தூர். | 0.05% குறைவு |
| 2 | திருமதி .டி.பழனியம்மாள்,ஒப்பந்ததாரர் ,ஆத்தூர். | 1.16 % அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர் ,ஆத்தூர். என்பவரின் 0.05 % மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர் ,ஆத்தூர். என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2879/2023/இ1)

24. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11ல் பேருந்து நிலையம் அருகில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பழக்கடைகள் மற்றும் வெற்றிலை மார்கெட் ஆகிய இரண்டு பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்காக கடைகள் மற்றும் மார்கெட் அமைப்பட உள்ள இடத்திற்கான மண்பரி சோதனை செய்யவும், Structural Design, வரைப் படங்கள் போன்றவை தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் (Private Consultant) மூலம் திட்ட பிரேரணைகள் தயார் செய்தல் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண் 798, நாள் 29.09.2023ல் அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 29.09.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளைமுடிவுசெய்யமன்றத்தின்ஒப்புதலுக்குவைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S .SPT C onsultancy Chennai | 0.63 % குறைவு(-) |
| 2 | M/S .T S Associates Chennai | 0.46 % அதிகம்(+) |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S .SPT consultancy Chennai என்ற நிறுவனத்தாரின் , 0.63 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S .SPT consultancy Chennai என்ற நிறுவனத்தாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் ஏற்கலாம்.

2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

25. ஆத்தூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2023 மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

26. ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2023 மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

தலைவர்,
ஆத்தூர் நகர்மன்றம்.